# பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 9

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 17

அறிமுகம் 23

**பகுதி 1: இஸ்லாமிய அகீதா ஓர் அறிமுகம் 27**

1 மார்க்கம் எதன்மீது கட்டப்பட்டுள்ளதோ அந்த அடித்தளத்தின் பார்வையில் அகீதாவின் முக்கியத்துவம் 29

2 அகீதாவின் மூல ஆதாரங்கள் மற்றும் அதைக் கற்றுக்கொள்வதில் முன்னோர்களின் (ஸலஃப்) வழிமுறை (மன்ஹஜ்) 33

3 வழிகேடுகள் அகீதாவில் நுழைவதற்கு வழியாக இருக்கும் பாதைகளும், ஒருவர் தம்மை அதிலிருந்து காத்துக் கொள்வதற்கான வழிகளும் 35

**பகுதி 2: தவ்ஹீது மற்றும் அதன் வகைகளின் விளக்கம் 47**

1 தவ்ஹீது அர்ருபூபிய்யாவின் பொருளும், இணைவைப்பவர்கள் அதனை ஏற்றுக்கொள்வதும் 49

2 குர்ஆனிலும் நபிவழியிலும் ரப்பு என்ற வார்த்தைக்கு வந்துள்ள விளக்கமும், வழிகெட்ட மக்கள் கொண்டுள்ள எதிரான விளக்கமும் 55

3 பிரபஞ்சம் முழுதும் இயற்கையாகவே அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிகின்றன; கட்டுப்படுகின்றன 65

4 படைப்புகளைப் படைத்திருப்பதிலும் வாழ்வாதாரம் அளிப்பதிலும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தைக் குர்ஆன் உறுதிசெய்கின்ற வழிமுறை 69

5 தவ்ஹீது அர்ருபூபிய்யா تَوْحِيْدُ الرُّبُوْبِيَّةِ, தவ்ஹீது அல்உலூஹிய்யாவைக் تَوْحِيْدُ الأُلُوْهِيَّةِ கட்டாயமாக்குகிறது; அதன்பால் கொண்டு சேர்க்கிறது 75

**பகுதி 3 தவ்ஹீது அல்உலூஹிய்யா** تَوْحِيْدُ الأُلُوْهِيَّةِ **81**

1 தவ்ஹீது அல்உலூஹிய்யாவின் பொருளும்,
அதுதான் இறைத்தூதர்களுடைய அழைப்பின்
சாரம் என்ற உண்மையும் 83

2 இரண்டு ஷஹாதாக்கள் (சாட்சிகள்) – அவற்றின் பொருளும்
தூண்களும் நிபந்தனைகளும் அவற்றுக்குத் தேவையானவையும்
அவற்றை முறிப்பவையும் 90

3 கூடும், கூடாது என்று சட்டம் இயற்றுதல்
அல்லாஹ்வின் உரிமை 105

4 வணக்கம் عِبَادَة (இபாதா) அதன் பொருளும்
அது உள்ளடக்கியவையும் 110

5 வணக்கம் குறித்த தவறான புரிதலுக்கு விளக்கம் 114

6 அல்லாஹ்வுக்குச் சரியான முறையில் அடிபணிவதின்
(உபூதிய்யா العُبُوْدِيَّةُ) தூண்கள் குறித்த விளக்கம் 117

**பகுதி 4: தவ்ஹீது அல்அஸ்மா வஸ்ஸிஃபாத்** تَوْحِيْدُ الأَسْمَاءِ وَالصِّفَاتِ **123**

1 அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளை உறுதிப்படுத்துவதில்
குர்ஆன், நபிவழி மற்றும் பகுத்தறிவுரீதியான ஆதாரங்கள் 125

2 அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் விசயத்தில் அஹ்லுஸ்
ஸுன்னத் வல்-ஜமாஅத் வழிமுறை 132

3 அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளில் சிலவற்றை அல்லது
அனைத்தையும் நிராகரிப்போருக்கான மறுப்பு 135

**பகுதி 5: மனித வாழ்வில் நெறி பிறழ்வும்
குஃப்ர், ஷிர்க், நிஃபாக் பற்றிய குறிப்புகளும் 145**

1 மனித வாழ்வில் நெறிபிறழ்வு 147

2 ஷிர்க்கும் அதன் வகைகளும் 152

3 குஃப்ரும் அதன் வகைகளும் 161

4 நயவஞ்சகமும் அதன் வகைகளும் 166

5 ஜாஹிலிய்யத் جَاهِلِيَّةٌ (அறியாமை), ஃபிஸ்க் فِسْقٌ (பாவம்),
ழலால் ضَلَالٌ (வழிகேடு), ரித்தத் رِدَّةٌ (மதமாற்றம்)
பற்றிய விளக்கக் குறிப்புகள் 173

**பகுதி 6: தவ்ஹீதைச் சீர்குலைக்கும் சொற்களும் செயல்களும் 183**

1 பால் கிதாபு, மை பார்ப்பதன் மூலம் மறைவான ஞானம் தனக்கு இருப்பதாக வாதாடுவது 185

2 சூனியமும் சோதிடமும் 188

3 கப்ருகளில் அடக்கம் செய்யப்பட்டோருக்கு அறுத்துப்பலியிடலும் நேர்ச்சை செய்தலும் 194

4 சிலைகளையும் நினைவுச் சின்னங்களையும் கண்ணியப்படுத்துவதன் சட்டம் 201

5 மார்க்கத்தைப் பரிகாசம் செய்தல், அதன் புனிதத்தைக் கெடுத்தல் பற்றிய சட்டம் 204

6 அல்லாஹ் இறக்கியதைக் கொண்டு தீர்ப்புக் கூறாமல் வேறு சட்டங்களைப் பின்பற்றுதல் 208

7 சட்டம் இயற்றுகின்ற அதிகாரம் தனக்குரியதாக வாதாடுவது 217

8 ஜாஹிலிய்யக் கட்சிகளிலும் நாத்திக அமைப்புகளிலும் சேர்ந்துகொள்வதன் சட்டம் 221

9 வாழ்க்கை பற்றிய உலகியல் (materialism) கண்ணோட்டமும் அதனால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளும் 228

10 ஓதிப்பார்த்தலும் தாயத்தும் 234

11 அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்தல், படைப்பினங்களைக் கொண்டு வஸீலா மற்றும் உதவி தேடுதல் பற்றிய சட்டம் 239

**பகுதி 7: நபி ﷺ அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் விசயத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டிய அம்சங்கள் 251**

1 நபி ﷺ அவர்களை நேசித்தல், கண்ணியப்படுத்துதல் அவசியம் நபி ﷺ அவர்களைப் புகழ்வதில் எல்லை மீறுவது தடை 253

2 நபியவர்களுக்குக் கீழ்ப்படிவதின் அவசியம் 264

3 நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறல் 268

4 அஹ்லுல் பைத்தின் சிறப்பும் அவர்கள் பற்றிய நடுநிலையான போக்கும் 270

5 நபித்தோழர்கள் சிறப்பும், அவர்களுக்கு மத்தியில் இடம்பெற்ற சச்சரவுகள் பற்றிய அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தினரின் நிலைப்பாடும் 275

6 நபித்தோழர்களையும் இமாம்களையும் திட்டுவது கூடாது 285

**பகுதி 8: பித்அத் بِدْعَةٌ 291**

1 பித்அத் வரைவிலக்கணமும் வகைகளும் அதன் சட்டங்களும் 293

2 முஸ்லிம்கள் வாழ்வில் பித்அத்தின் தோற்றமும் காரணிகளும் 299

3 பித்அத்வாதிகள் விசயத்தில் இஸ்லாமியச் சமுதாயத்தின் நிலைப்பாடும், இவர்களுக்கு மறுப்புக் கூறுவதில் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தின் போக்கும் 306

4 நவீன பித்அத்துகளும் சில உதாரணங்களும் 312

5 பித்அத்வாதிகளிடம் எப்படி நடந்துகொள்வது? 318

# 1

# மார்க்கம் எதன்மீது கட்டப்பட்டுள்ளதோ அந்த அடித்தளத்தின் பார்வையில் அகீதாவின் முக்கியத்துவம்

❀

## மொழிரீதியாக அகீதாவின் பொருள்

அல்அகீதா (اَلْعَقِيْدَةُ) எனும் சொல் 'அல்அக்த்' (اَلْعَقْدُ) என்ற வேர்ச்சொல் லிலிருந்து உருவாகிறது. ஒன்றை உறுதியாக இணைத்துக் கட்டுதல் என்று அர்த்தம். 'இஅதகத்து கதா' (اِعْتَقَدْتُ كَذَا) என்றால், என் உள்ளமும் சிந்தனையும் இதன் மீதே உறுதியாக நிலைத்துள்ளது என்று பொருள். மனிதன் எதைத் தன் மார்க்கமாக நம்புகிறானோ அதுவே அகீதா. 'அவனுடைய அகீதா உறுதியானது' என்று கூறினால், அது சந்தேகத்தை விட்டு நீங்கியது என அர்த்தம். அகீதா என்பது உள்ளத்தின் செயல்பாடு. அதாவது, உள்ளம் ஒன்றை நம்பிக்கை கொண்டு, அதை உண்மைப்படுத்த வேண்டும்.

## மார்க்க ரீதியாக அகீதாவின் பொருள்

மார்க்கத்தில் அகீதா என்பது அல்லாஹ், மலக்குகள், வேதங்கள், தூதர்கள், மறுமைநாள், விதியின் நன்மை தீமை இவற்றின்மீது நம்பிக்கை வைப்பதாகும். இவற்றையே ஈமானின் தூண்கள் எனப்படுகிறது.

மார்க்கம் (ஷரீஆ) இரண்டு அம்சங்களைக் கொண்டது. முதலா வது, நம்பிக்கைகள். இரண்டாவது, செயல்கள்.

நம்பிக்கைகள் (اِعْتِقَادِيَّاتٌ) என்பவை ஒரு செயல் எப்படிச் செய்யப் பட வேண்டும் என்பதற்குச் சம்பந்தப்படாத விசயங்கள். உதார ணத்திற்கு அல்லாஹ்வின் வல்லமை (ருபூபிய்யத்) குறித்த நம் பிக்கை, அவன் ஒருவனையே வணங்க வேண்டும் என்ற கடமை

# 2

# அகீதாவின் மூல ஆதாரங்கள் மற்றும் அதைக் கற்றுக்கொள்வதில் முன்னோர்களின் [ஸலஃப்][7] வழிமுறை [மன்ஹஜ்]

❀

மார்க்க ஆதாரங்களைக் கொண்டு நிறுவப்படுவதே அகீதா. ஆதாரங்களில் உட்படாத எதையும் அகீதாவில் எடுக்க முடியாது. அதில் சுயவிளக்கங்கள், ஊகங்களுக்கு கொஞ்சமும் இடமில்லை. இதை 'அல்அகீதத்து தவ்கீஃபிய்யா' (اَلْعَقِيْدَةُ تَوْقِيْفِيَّةٌ) எனப்படும். (தவ்கீஃபிய்யா என்றால் வரையறுக்கப்பட்டது, ஆதாரங்களால் மட்டுமே நிறுவ முடிந்தது என்று பொருள்.) எனவே, அகீதாவை அல்லாஹ்வின் வேதம், அவனுடைய நபியின் விளக்கம் ஆகியவற்றில் தவிர வேறு எதிலிருந்தும் பெறக் கூடாது. வரையறுக்கப்பட்ட ஆதாரங்கள் இவை இரண்டுதாம். அல்லாஹ்வுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளை அல்லாஹ்வைவிட அதிகம் தெரிந்தவர் இருக்க முடியாது. அதற்குப் பின், அவனுடைய தூதரைவிட அதிகம் தெரிந்தவர் இருக்க முடியாது. ஆகவேதான், நபித்தோழர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் குர்ஆன் மற்றும் நபிவழியிலிருந்து மட்டுமே அகீதாவைக் கற்றார்கள்.

---

7 ஸலஃப்: முன்சென்றோர். ஸாலிஹ் என்றால் நல்லோர். நல்ல முன்னோர்கள் எனும் பொருளில் அஸ்ஸலஃப் அஸ்ஸாலிஹ் என்று கூறப்படும். இச்சொற்கள் மூலம் நபித்தோழர்களையும் அவர்களைப் பின்பற்றிய தாபிஈன், தபஉ தாபிஈன் ஆகிய மூன்று தலைமுறைகளைக் குறிப்பிடுவார்கள். இவர்களைப் பின்பற்றிய மக்களை ஸலஃபி என்பார்கள். அதாவது, ஸலஃப்பைப் பின்பற்றியவர். நாம் அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையிலும் வழிமுறையிலும் உறுதியாக உள்ளவர்களை ஸலஃபி என்கிறோம். இப்பெயர் ஒருவர் கொண்டுள்ள கொள்கையை அடையாளப்படுத்துகிறது.

# 3

# வழிகேடுகள் அகீதாவில் நுழைவதற்கு வழியாக இருக்கும் பாதைகளும், ஒருவர் தம்மை அதிலிருந்து காத்துக் கொள்வதற்கான வழிகளும்

❀

நல்ல அகீதா நற்செயல்களைப் பலனளிக்க வைக்கும் உந்துசக்தி யாக இருக்கும். கெட்ட அகீதாவோ அழிவையும் நாசத்தையும் கொண்டு வரும்.

## கெட்ட அகீதாவினால் ஏற்படும் பாதிப்பு

கெட்ட அகீதா உள்ளவன் எப்போதும் குழப்பங்களிலும் சந்தேகங் களிலும் சிக்கி உழல்வான். எனவே, மகிழ்ச்சிகரமான வாழ்க்கையின் சரியான பாதைகளை அவனால் கண்டுகொள்ள முடியாது. அவை அவனுக்கு மங்கலாகவே இருக்கும். தடுமாறி நிம்மதி இழந்து கிடப்பான். மனஅழுத்தங்கள் காரணமாக தன் வாழ்க்கைக்கு முடி வைத் தேடுவான். இறுதியில் தற்கொலைக்கும் துணிந்து விடு வான். எந்தச் சமுதாயம் நல்ல அகீதாவைக் கொண்டு பலப்படுத்தப் படவில்லையோ அந்தச் சமுதாயம் மிருகச் சமுதாயமாகவே இருக் கும். மகிழ்ச்சியைக் கொண்டு வரும் சாதனங்கள் அனைத்தையும் அது இழந்திருக்கும். அவர்களிடம் உலக வசதிக்கான சாதனங்கள் கொட்டிக் கிடந்தாலும், அவையெல்லாம் அழிவுக்கே வழிவகுக்கும். காஃபிர் சமுதாயங்கள் இதற்குப் பெரிய சாட்சி. ஏன் இப்படி என்றால், உலகச் சாதனங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும், அவற்றிலிருந்து எப்படி நன்மை அடைய வேண்டும், எதை எதற்குப் பயன்படுத்த வேண்டும் என்பதெல்லாம் அந்தக் காஃபிர் சமுதாயங்களுக்குத் தெரிவதில்லை. நேர்வழி தேவைப்பட்டிருந்தும் அது இல்லாமல் இருக்கிறார்கள்.

# 1

# தவ்ஹீது அல்உலூஹிய்யாவின் பொருளும், அதுதான் இறைத்தூதர்களுடைய அழைப்பின் சாரம் என்ற உண்மையும்

❀

## பொருள்

தவ்ஹீது உல்உலூஹிய்யா என்றாலே வணக்கம்தான். அடியார்கள் தங்கள் செயல்களின் மூலம் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதும், அவனையே வணங்குவதும்தான் தவ்ஹீது அல்உலூஹிய்யாவின் பொருளாகும். அவனுடைய நெருக்கத்தைப் பெற அவன் இயற்றியுள்ள சட்டப்படி இதைச் செய்ய வேண்டும். உதாரணமாக, பிரார்த்தனை, நேர்ச்சை, பலியிடல், ஆதரவு வைத்தல், பயப்படுதல், பொறுப்புச் சாட்டுதல், பயபக்தி காட்டுதல், உள்ளச்சம் கொள்தல், பாவமன்னிப்புக் கேட்டல் ஆகிய அனைத்தையும் அல்லாஹ்வின் சட்டப்படி அவன் ஒருவனுக்கே உரித்தாக்க வேண்டும்.

## நபிமார்களின் முதல் அழைப்புப்பணி

இந்த வகை தவ்ஹீதுதான் எல்லா நபிமார்களுடைய அழைப்பின் சாரமாக இருந்தது. அவர்களில் முதல் நபியிலிருந்து கடைசி நபி வரை அனைவரும் அழைத்தது இதன்பக்கம்தான். அல்லாஹ் கூறுகிறான்:

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَّسُولًا أَنِ اعْبُدُواْ اللَّهَ وَاجْتَنِبُواْ الطَّاغُوتَ

ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் நிச்சயமாக நாம் ஒரு தூதரை அனுப்பினோம். 'அல்லாஹ்வையே வணங்குங்கள். (அவனை வணங்குவதிலிருந்து உங்களை வழிகெடுக்கிற ஷைத்தான்களாகிய எல்லா) 'தாகூத்'தைவிட்டும் விலகிக்கொள்ளுங்கள்' என்றார்கள் அவர்கள். *(குர்ஆன் 16:36)*

وَمَا أَرْسَلْنَا مِن قَبْلِكَ مِن رَّسُولٍ إِلا نُوحِي إِلَيْهِ أَنَّهُ لا إِلَهَ إِلا أَنَاْ فَاعْبُدُونِ

# 2

# இரண்டு ஷஹாதாக்கள் [சாட்சிகள்] – அவற்றின் பொருளும் தூண்களும் நிபந்தனைகளும் அவற்றுக்குத் தேவையானவையும் அவற்றை முறிப்பவையும்

❀

## இரண்டு சாட்சியங்களின் [ஷஹாதத்தைன்] பொருள்

*முதல் சாட்சியம்: லா இலாஹ இல்லல்லாஹ் (வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ் தவிர யாருமில்லை)*

வணங்குவதற்குத் தகுதியான இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் அறவே இல்லை என்று நம்பிக்கை கொண்டு உறுதிப்படுத்த வேண்டும். அதன்படிச் செயல்பட வேண்டும்; கடமையாற்ற வேண்டும். ஆக,

- லா இலாஹ என்பது அல்லாஹ்வுடன் இணை வைக்கப்படும் அனைத்தையும், அது எதுவாக இருந்தாலும் நிராகரிக்கப்பட வேண்டும் என்கிற உண்மையைச் சொல்கிறது.
- இல்லல்லாஹ் என்பது அல்லாஹ் ஒருவன் மட்டும் வணங்கப்பட வேண்டும் என்று உறுதிசெய்கிறது.

### சரியான அர்த்தம்

இந்தச் சாட்சியத்தின் பொதுவான அர்த்தம், வணங்கப்படுவதற்கு உண்மையாகத் தகுதிகொண்ட இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை என்பதாகும். லா எனும் சொல், பிஹக்கின் (بِحَقٍّ உண்மையாக) என்ற சொல்லுடன் வரக்கூடியது. (அறபுமொழிப் படி இக்கருத்து அதனுள் அடங்கியிருக்கிறது.)

# 4

# வணக்கம் عِبَادَة [இபாதா] அதன் பொருளும் அது உள்ளடக்கியவையும்

❀

## வணக்கத்தின் பொருள்

பணிவும் அர்ப்பணமும்தான் வணக்கத்தின் அடிப்படை. மார்க்கத்தில் இதற்குப் பல வரையறைகள், விளக்கங்கள் உண்டு. என்றாலும், அவற்றின் பொருள் ஒன்றுதான். அவை:

- வணக்கம் என்பது அல்லாஹ்வுக்கு அர்ப்பணமாவது. அதை அவன் மீதான நேசத்துடனும் மிகுந்த பணிவுடனும் செய்வது.
- வணக்கம் என்பது அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிவது. அவன் தன்னுடைய தூதர்களின் நாவுகள் வழியாக என்ன வெல்லாம் கட்டளையிட்டானோ அதற்குக் கட்டுப்படுவது.
- மிகவும் பொதுவான விளக்கம் என்னவென்றால், அது ஓர் ஒருங்கிணைந்த வார்த்தை. அல்லாஹ் விரும்பக்கூடிய, திருப்தி அடையக்கூடிய எல்லா விதச் சொற்களும் செயல்களும் உள்ளடங்கியது. அவை வெளிப்படையாகவோ மறைவாகவோ இருக்கலாம்.

வணக்கத்தை வகைப்படுத்த முடியும். உள்ளத்தால், நாவால், உடல் உறுப்புகளால் வணங்குதல் என்று.

- அஞ்சுவது, ஆதரவு வைப்பது, நேசிப்பது, பொறுப்புச் சாட்டுவது, ஆர்வம்கொள்வது, அச்சம்கொள்வது இவை அனைத்தும் உள்ளத்தின் வணக்கம்.
- அல்லாஹ்வைத் துதிப்பது (தஸ்பீஹ்), லா இலாஹ இல்லல்லாஹ் சொல்வது (தஹ்லீல்), அல்லாஹு அக்பர் (தக்பீர்), அல்ஹம்துலில்லாஹ் (தஹ்மீது) சொல்வது, நன்றி செலுத்துவது இவை அனைத்தும் நாக்கு, உள்ளம் இரண்டினுடைய வணக்கம்.

# 3

## குஃப்ரும் அதன் வகைகளும்

❀

### குஃப்ர் كُفْرٌ என்றால் என்ன?

அறபுமொழியில் 'குஃப்ர்' என்ற பதம் மூடுதல், மறைதல் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது. இஸ்லாமிய வழக்கில் 'குஃப்ர்' என்பது ஈமானுக்கு எதிர்ப்பதமாகும். எனவே, அல்லாஹ்வையும் இறைத்தூதர்களையும் ஈமான் கொள்ளாமல் இருப்பதே 'குஃப்ர்' ஆகும்.

அல்லாஹ்வையும் இறைத்தூதர்களையும் பொய்ப்பித்த நிலையிலும் அல்லது பொய்ப்பிக்காத நிலையிலும் ஈமான் கொள்ளாமல் இருப்பதே குஃப்ர் ஆகும். ஏன், சந்தேகம், பொறாமை, பெருமை அல்லது மமதை காரணமாக இஸ்லாமுக்குக் கட்டுப்பட்டு ஈமான் கொள்ள மறுத்தாலும் அது குஃப்ரே ஆகும். (மஜ்மூஉல் ஃபதாவா, ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா 12/335)

### குஃப்ரின் வகைகள்

குஃப்ர் இரண்டு வகைப்படும். அவை:

*1. குஃப்ர் அக்பர் (பெரிய குஃப்ர் كُفْرٌ أَكْبَرُ)*

இது மார்க்கத்தை விட்டு வெளியேற்றிவிடும். இது ஐந்து பிரிவுகளாகும்.

1. பொய்ப்பித்து நிராகரிப்பது:

وَمَنْ أَظْلَمُ مِمَّنِ افْتَرَى عَلَى اللَّهِ كَذِبًا أَوْ كَذَّبَ بِالْحَقِّ لَمَّا جَاءَهُ أَلَيْسَ فِي جَهَنَّمَ مَثْوًى لِّلْكَافِرِينَ

'அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டுபவனை விட அல்லது தன்னிடம் சத்தியம் வந்தபோது அதைப் பொய்ப்

# 5

# ஜாஹிலிய்யத் جَاهِلِيَّةٌ [அறியாமை], ஃபிஸ்க் فِسْقٌ [பாவம்], ழலால் ضَلَالٌ [வழிகேடு], ரித்தத் رِدَّةٌ [மதமாற்றம்] பற்றிய விளக்கக் குறிப்புகள்

❀

## 1. ஜாஹிலிய்யத் جَاهِلِيَّةٌ [அறியாமை]

*'ஜாஹிலிய்யத்' என்பது இஸ்லாமுக்கு முன் அறபியர்கள் அல்லாஹ்வைப் பற்றியும், அவனது தூதர்கள், மார்க்கக் கடமைகள் ஆகியன பற்றியும் அறியாமல் இருந்ததோடு குலப்பெருமை பேசிப் பெருமை அடித்துத் திரிந்த நிலைமையைக் குறிக்கும். (அந்நிஹாயா-இப்னுல் கதீர் 1/323)*

அறியாமை அல்லது அறிவைப் பின்பற்றாமை என்றும் கூறலாம். இமாம் இப்னு தைமிய்யா ﵀ கூறுகின்றார்கள்: யார் சத்தியத்தை அறியவில்லையோ அவன் சாதாரண அறிவிலி ஆவான். எவன் சத்தியத்திற்கு மாற்றமான கொள்கையைக் கொண்டிருக்கிறானோ அவன் இரட்டிப்பு மடையனாவான். இந்த விசயம் தெளிவானால் அறிந்துகொள்ளுங்கள்: நபி ﷺ அவர்களது வருகைக்கு முன்னர் மக்கள் அறியாமையில் இருந்தார்கள். அவர்களது சொல், செயல் யாவும் ஓர் அறிவிலியால் உருவாக்கப்பட்டவையாக இருந்தன. எனவே, அவற்றைச் செய்யக்கூடியவனும் அறிவிலியே! அவ்வாறே இறைத்தூதர்கள் கொண்டு வந்ததிற்கு மாற்றமான யூத, கிறித்தவமும் அறியாமைதான். இவற்றைப் பொதுவான 'ஜாஹிலிய்யத்' என்று கூறலாம், நபி ﷺ அவர்களது வருகைக்குப் பின்னர் ஜாஹிலிய்யத் என்பது காஃபிரான நாடுகள் போன்ற சில குறிப்பிட்ட நாடுகளிலோ, சில மனிதர்களிலோ காணப்படலாம். உதாரணமாக, ஒரு மனிதன் இஸ்லாமை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் அவன் அறியாமையிலேயே இருக்கிறான். அவன் இஸ்லாமிய நாட்டில் இருந்தாலும் சரியே! பொதுவாகக் காலத்தை அடிப்படையாக

# 8

## ஜாஹிலிய்யக் கட்சிகளிலும் நாத்திக அமைப்புகளிலும் சேர்ந்துகொள்வதன் சட்டம்

❀

1. கம்யூனிசம், முதலாளித்துவம், நாத்திகம் போன்ற அமைப்பு களையும் கொள்கைகளையும் ஆதரிப்பதும் அவற்றில் இணைந்து செயல்படுவதும் மதமாற்றத்தை உண்டுபண்ணக்கூடியதாகும். இந்த அமைப்புகளில் இணைந்து செயல்படக்கூடியவன் முஸ்லிம் என்று தன்னைப் பிரகடனப்படுத்துபவனாக இருந்தால் அவன் உண்மையில் மிகப் பெரிய நயவஞ்சகனாகவே இருப்பான். ஏனெனில், முனாஃபிக்குகள்தாம் வெளிப்படையில் முஸ்லிமாக நடித்துக்கொண்டு உள்ரங்கத்தில் குஃப்ரை ஆதரிக்கக்கூடியவர்கள். இப்படிப்பட்டவர்களைப் பின்வரும் வசனங்கள் அடையாளங் காட்டுகின்றன.

وَإِذَا لَقُواْ الَّذِينَ آمَنُواْ قَالُوٓاْ آمَنَّا وَإِذَا خَلَوْاْ إِلَى شَيَاطِينِهِمْ قَالُوٓاْ إِنَّا مَعَكُمْ إِنَّمَا نَحْنُ مُسْتَهْزِؤُونَ

அவர்கள் விசுவாசம்கொண்டோரை சந்தித்தால், 'நாங்களும் (உங்களைப் போல்) விசுவாசம் கொண்டிருக்கிறோம்' எனக் கூறுகிறார்கள். மேலும், அவர்கள் தங்களின் (இனத்தவர்களாகிய) ஷைத்தான்களுடன் தனிமையில் சந்தித்தால், 'நிச்சயமாக நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். நாங்கள் (விசுவாசிகளைப்) பரிகாசம் செய்யக்கூடியவர்கள்தாம்' எனக் கூறுகின்றனர். (குர்ஆன் 2:14)

الَّذِينَ يَتَرَبَّصُونَ بِكُمْ فَإِن كَانَ لَكُمْ فَتْحٌ مِّنَ اللَّهِ قَالُوٓاْ أَلَمْ نَكُن مَّعَكُمْ وَإِن كَانَ لِلْكَافِرِينَ نَصِيبٌ قَالُوٓاْ أَلَمْ نَسْتَحْوِذْ عَلَيْكُمْ وَنَمْنَعْكُم مِّنَ الْمُؤْمِنِينَ

'(வேடதாரிகளாகிய) இத்தகையோர் உங்களை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றனர். அல்லாஹ்வி(ன் உதவியி)னால் உங்களுக்கு வெற்றிகிடைத்தால் நாங்கள் உங்களுடன் இருக்க

# 2

# முஸ்லிம்கள் வாழ்வில் பித்அத்தின் தோற்றமும் காரணிகளும்

❀

## 1. பித்அத் தோன்றிய காலம்

இமாம் இப்னு தைமிய்யா ﵀ அவர்கள் கூறுகிறார்கள்: அறிந்து கொள்ளுங்கள்! பொதுவாகக் கல்வி மற்றும் வணக்க வழிபாடுகளில் காணப்படும் பித்அத்துகள் அல்குலஃபாஉர் ராஷிதூன்களின் (நேர்வழி பெற்ற கலீஃபாக்களின்) இறுதிக்கால கூட்டத்தில்தான் தோன்ற ஆரம்பித்தன.

مَنْ يَعِشْ مِنْكُمْ فَسَيَرَى اخْتِلاَفًا كَثِيرًا فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ

'(எனக்குப் பின்) வாழக்கூடியவர்கள் பல கருத்துவேறுபாடு களைக் காண்பர். அவ்வேளை எனது ஸுன்னத்தையும் நேர்வழி நடந்த கலீஃபாக்களின் வழிமுறைகளையும் பின்பற்றுங்கள்' என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பு: இர்பாள் இப்னு ஸாரியா ﵁, அபூதாவூது 4609, திர்மிதீ 2676, அஸ்ஸஹீஹா 937)

கதர், இர்ஜாஉ, ஷீஆ, கவாரிஜ் போன்ற பித்அத்துகளே முதன் முதலில் தோன்றியவையாகும்.

உஸ்மான் ﵁ அவர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கவாரிஜ் (ஹரூரிய்யா என்ற) பித்அத் தோற்றம் பெற்றது. இப்னு உமர், இப்னு அப்பாஸ், ஜாபிர் ﵃ போன்ற நபித்தோழர்களின் இறுதிக் காலக்கட்டத்தில் 'கத்ரிய்யா' என்ற பித்அத் தோன்றியது. அதற்குச் சொற்ப காலத்துக்குப் பின்னர் 'இர்ஜாஉ' என்ற பித்அத் தோற்றம் பெற்றது. ஜஹ்மிய்யாக்களைப் பொறுத்த வரை உமர் இப்னு அப்தில் அஸீஸ் ﵀ அவர்களது மரணத்தின் பின் அதாவது தாபிஈன் களுடைய காலத்தின் இறுதிப் பகுதியில் தோற்றம் பெற்றனர்.